## <u>மணப்பாறை நகராட்சி</u>

**2020- ஆம் ஆண்டு ஜீலை மாதம் (29.07.2020) 29 – ஆம் தேதி புதன்கிழமை மாலை 04.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.**

<table>
<tr><th>மன்ற கூட்டம் நடைபெற்ற நாள்</th><th>வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள்</th><th>தீர்மானம்</th></tr>
<tr><td>29.07.2020</td><td>

**பொருள் – 1**

மணப்பாறை நகராட்சி வார்டு எண் :4 பொத்தமேட்டுப்பட்டி மழைநீர் வடிகால் அமைத்தல் பணியை வருவாய் நிதி திட்டம் 2020-21-ன் கீழ் மேற்கொள்வதற்கு 22.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டபடி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் மீது ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

<table>
<tr><th>வ. எண்</th><th>வேலையின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்)</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம்</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">வார்டு எண் :4 பொத்தமேட்டுப் பட்டி மழைநீர் வடிகால் அமைத்தல்</td><td rowspan="2">9.50</td><td>திரு.ஆர்.ரெத்தினபாண்டியன்</td><td>0.07 % மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு</td></tr>
<tr><td>திரு. பி.கோபால்</td><td>0.30%மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம்</td></tr>
</table>

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.ஆர்.ரெத்தினபாண்டியன் –0.07% மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட குறைவாகவும் கொடுத்துள்ளார். எனவே திரு.ஆர்.ரெத்தினபாண்டியன் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

(ந.க.எண்:1703-1/2020/இ1)

1. மன்றம் அனுமதிக்கலாம்

</td><td>

**தீர்மான எண்.813**
**<u>அனுமதிக்கப்பட்டது.</u>**

</td></tr>
</table>

29.07.2020

**பொருள் – 2**

மணப்பாறை நகராட்சி வார்டு எண்:20 மணப்பாறைப்பட்டி மெயின் சாலை மழைநீர் வடிகால் மற்றும் சிறு பாலம் அமைத்தல் வருவாய் நிதி திட்டம் 2020-21-ன் கீழ் மேற்கொள்வதற்கு 22.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டபடி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஓப்பந்ததாரர் பெயர் | ஓப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் :20 மணப்பாறைப்பட்டி மெயின் சாலை மழைநீர் வடிகால் மற்றும் சிறு பாலம் அமைத்தல் | 9.90 | திரு. பி.கோபால் | 0.07 % மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு.எ.அருள்சௌந்தர்ராஜ் | 0.14 %மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.பி.கோபால் 0.07% மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட குறைவாகவும் கொடுத்துள்ளார். எனவே திரு. பி.கோபால் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

(ந.க.எண்:1703-4/2020/இ1)

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.814**
**அனுமதிக்கப்பட்டது.**

29.07.2020

**பொருள் – 3**

மணப்பாறை நகராட்சி வார்டு எண் :11 அண்ணாநகர் குறுக்கு சாலை பேவர் பிளாக் அமைத்தல் வருவாய் நிதி திட்டம் 2020-21-ன் கீழ் மேற்கொள்வதற்கு 22.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டபடி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஓப்பந்ததாரர் பெயர் | ஓப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் :11 அண்ணாநகர் குறுக்கு சாலை பேவர் பிளாக் அமைத்தல். | 5.00 | திரு.எஸ்.சண்முகம் | 0.05 % மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | திரு. ஜி.முரளி | 3.97 % மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**தீர்மான எண்.815**
**அனுமதிக்கப்பட்டது.**

<table>
<tr>
<td></td>
<td>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.எஸ்.சண்முகம் 0.05 % மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட குறைவாகவும் கொடுத்துள்ளார். எனவே திரு.எஸ்.சண்முகம் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலகக்குறிப்பு</u><br>(ந.க.எண்:1703–3/2020/இ1)<br>1. மன்றம் அனுமதிக்கலாம்</td>
<td></td>
</tr>
<tr>
<td>29.07.2020</td>
<td>பொருள் :4<br>மணப்பாறை நகராட்சி வார்டு எண்:4 பொத்தமேட்டுப்பட்டி குறுக்கு சாலை பேவர் பிளாக் அமைத்தல் வருவாய் நிதி 2020-21-ன் கீழ் மேற்கொள்வதற்கு 22.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டபடி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில்<br><br>
<table>
<tr><th>வ. எண்</th><th>வேலையின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்)</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி சதவீதம்</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">வார்டு எண் :4 பொத்தமேட்டுப் பட்டி குறுக்கு சாலை பேவர் பிளாக் அமைத்தல்</td><td rowspan="2">9.50</td><td>திரு.எ.அருள்சௌந்தர்ராஜ்</td><td>0.07 % மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு</td></tr>
<tr><td>திரு. பி.கோபால்</td><td>0.22 % மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம்</td></tr>
</table><br>
எனவே வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.எ.அருள்சௌந்தர்ராஜ் 0.07% மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட குறைவாகவும் கொடுத்துள்ளார். எனவே திரு.எ.அருள்சௌந்தர்ராஜ் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலகக்குறிப்பு</u><br>(ந.க.எண்:1703–2/2020/இ1)<br>1. மன்றம் அனுமதிக்கலாம்</td>
<td>தீர்மான எண்.816<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 29.07.2020 | **பொருள் :5**<br>கொரோனா நோய் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக , கட்டுப்படுத்தப்பட்ட பகுதியாக (Containment Zone) அறிவிக்கப்பட்ட கல்லாத்துப் பட்டி, இந்திரா நகர் பகுதியில் தகர சீட் கொண்டு தடுப்பு வேலி அமைத்தல் பணி தொற்று நோய் தடுப்பு அவசரம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் ரூ .7,400/- செலவில் பணி மேற்கொண்டமை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக்குறிப்பு</u>**<br>பதிவு செய்யலாம்<br>(ந.க.எண்.1003/2020/எச்2) | **தீர்மான எண்.817**<br>**பதிவுசெய்யப்பட்டது** |
| 29.07.2020 | **பொருள் :6**<br>வட்டாட்சியர், மணப்பாறை அவர்களின் தலைமையில் நடைபெ ற்ற அனுமதி பேச்சுவார்த்தை கூட்ட முடிவு அறிக்கை ந.க.எண்.ஆ5/100/2020 நாள்.15.06.2020ல் முடிவு செய்யப்பட்டவாறு திருச்சி ரோடு ஸ்ரீஅலமேலு அம்மாள் மாடர்ன் ரைஸ் மில் பகுதியில் இருந்து நேரு சிலை வரை உள்ள பகுதியில் உள்ள தூர்ந்து போன சாக்கடை JCB இயந்திரம் மூலம் தூர் வாரும் பணி ரூ .49,000/- செலவில் பொது சுகாதார அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பணிமேற்கொண்டதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக்குறிப்பு</u>**<br>பதிவு செய்யலாம்<br>(ந.க.எண்.1386/2020/எச்2) | **தீர்மான எண்.818**<br>**பதிவுசெய்யப்பட்டது** |
| 29.07.2020 | **பொருள் :7**<br>இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் வார்டு எண்.16–ல் சேதுரெத்தினபுரம் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.9.60 லட்சம். மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>1. மன்றம்அனுமதிக்கலாம்<br>2. பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றம்அனுமதிக்கலாம்<br>3. மேற்கண்ட செய்வதற்கும் உத்தேச செலவு தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம் | **தீர்மான எண்.819**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| 29.07.2020 | **பொருள் :8**<br>மணப்பாறை நகராட்சிக்கு சொந்தமான ஆடு அடிக்கும் இடம் பார்க் ரோட்டில் அமைந்துள்ள ஆடு அடிக்கும் இடத்தில் புதிதாக நான்கு கடைகள் கட்டப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது . நகராட்சிக்கு வருவாய் அதிகரிக்கும் வகை யில் மேற்படி கடைகளை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அழைப்பு மூலம் உயர்ந்தபட்ச வாடகை தொகையை ஒப்படைப்பு செய்யவும் , கடை ஒன்றுக்கு மாத வாடகையாக ரூ.5000/-ஐ நிர்ணயம் செய்யவும் , மேற்படி கடைகளுக்கு ஏற்படுத்தப்பட்ட சிறப்பு நிபந்தனைகளுக்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br>மன்றம்அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.820 அனுமதிக்கப்பட்டது.** |
| 29.07.2020 | **பொருள் :9**<br>நமது மாநிலத்தில் , பசுமை சூழலை அதிகரிக்கும் வகையில் மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் பயன்பாடின்றி உள்ள திறந்தவெளி நிலங்களில் "மியாவாக்கி" முறையில் குறைந்த இடத்தில் அதிக எண்ணிக்கையிலான மரங்கள் நடப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் சட்டமன்றத்தில் விதி எண் .110ன் கீழ் அறிவிப்பு வெளியிடப்பட்டதனை தொடர்ந்து மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுக்கு சொந்தமான 400 சதுரமீட்டர் பரப்பளவிற்கு மேல் உள்ள திறந்தவெளி இடங்களில், பசுமை சூழலை அதிகரிக்கும் வகையில் மியாவாக்கி முறையில் மரங்கள் நடுவதற்கு , அரசாணை எண்.231 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் .07.07.2020-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதென்றும், மரங்கள் நடுவதற்கு ஆரம்பிக்கும் முன் 400 சதுர மீட்டர் பரப்பளவிற்கும் குறைவில்லாத நிலத்தை தேவைக்கேற்ப வளப்படுத்தி , வனத்துறை மற்றும் வேளாண்துறையின் ஆலோசனையின்பேரில் மரங்களை தேர்வு செய்து மரங்களை நடுவதும் , மரக்கன்றுகளை குறைந்தபட்சம் 5 அல்லது 6 ஆண்டுகளுக்கு தண்ணீர் ஊற்றி பராமரிப்பு செய்யவும், மரங்கள் குறிப்பிட்ட அளவு வளர்ந்த பின் எவ்வித பராமரிப்பின்றி இயற்கையாகவே நிலைத்து நிற்கும் வகையில் , வேம்பு, மா, நாவல், தேக்கு, அத்தி, புங்கன் உள்ளிட்ட மரங்களை நகர்ப்புற பகுதிகளில் பசுமை சூழலை அதிகரிக்க தனியார் பங்களிப்பு மற்றும் உள்ளாட்சியின் பொது நி தியிலிருந்து "மியாவாக்கி " முறையில் மரங்கள் நடுவதற்கு அரசு உத்திரவிட்டதென்றும், அக்டோபர் மாதத்தில் வடகிழக்கு பருவமழை துவங்க உள்ள நிலையில் அதற்கு முன்னதாக திறந்தவெளி இடத்தின் நிலத்தின் வளத்திற்கேற்ப வனத்துறை மற்றும் வேளாண்மைத்துறையின் ஆலோசனைகளை பெற்று நட வு பணியினை தொடங்கும்படியும் அவ்வாறு மேற்கொள்ளும் பணிகளை உரிய முறையில் ஆவணப்படுத்தப்பட வேண்டும் எனவும் , பணியின் முதல் முன்னேற்றத்திற்கான 15.08.2020ம் தேதிக்குள் நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அறிக்கையாக சமர்ப்பிக்கும்படி நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்களின் கடிதம் | **தீர்மான எண்.821 அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| | ந.க.எண்.15081/2018/டிபி3 நாள்.18.07.2020ம் தேதிக்குள் அறிவுறுத்தப்பட்டுள்ளது . மணப்பாறை நகராட்சிக்கு திறந்தவெளி நிலையில் "மியாவாக்கி" முறையில் மரம் நடுவதற்கு ஒரு எண்ணிக்கை குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.<br>எனவே, மேற்படி அரசாணையினை செயல் படுத்திட நகராட்சி அலுவலர்களால் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், இந்நகராட்சிக்கு சொந்தமான செவலூர் கிராமம் சர்வே எண்கள் 777/5ஏ,5பி மற்றும் 779/1 ஆகியற்றில் அமையும் பயன்பாடின்றி உள்ள சிவசக்தி நகர் மனைப்பிரிவில் 2215 சதுர மீட்டர் பரப்பளவில் உள்ள "திறந்தவெளி பூங்கா " -விற்கான இடம் "மியாவாக்கி" முறையில் மரம் நடுவதற்கு ஏற்ற இடமாக உள்ளதால், அதனை தேர்வு செய்யப்பட்டுள்ளது.<br>அரசாணை மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின் அடிப்படையில் செவலூர் கிராமம் சர் வே எண்கள் 777/5ஏ,5பி மற்றும் 779/1 இவற்றில் அமையும் நகராட்சிக்கு சொந்தமான , சிவசக்திநகர் மனைப்பிரிவில் 2215 சதுரமீட்டர் பரப்பளவில் உள்ள திறந்தவெளி பூங்காவில் "மியாவாக்கி" முறையில் பசுமை சூழலை அதிகரிக்கும் வகையில் அடர்காடுகளை உருவாக்குவதற்காக தேர்வு செ ய்யப்பட்டுள்ள இடத்திற்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக்குறிப்பு**<br>அனுமதி வழங்கலாம்<br>(ந.க.எண்.1867/2020/எப்1) | |

**தனி அலுவலர்**
**மணப்பாறை நகராட்சி**